செ.கு.எண்: 261

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்களின்

**அறிக்கை – 16.12.2011**

காஞ்சிபுரம் மாவட்டம், மாங்காடு காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளாராகப் பணி புரிந்து வந்த திரு. M.வீரராகவன் அவர்கள் இன்று **(16.12.2011)** தனது இரு சக்கர வாகனத்தில் சென்று கொண்டிருந்த போது, எதிரே வந்த லாரி மோதியதால் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்ற செய்தியை அறிந்து நான் மிக்க துயரம் அடைந்தேன்.

சிறப்பு உதவி ஆய்வாளர் திரு. வீரராகவன் பணியில் இருக்கும் போது காலமானார் என்னும் செய்தி எனக்கு மிகுந்த வருத்தத்தை அளிக்கின்றது. திரு. வீரராகவன் அவர்களின் அகால மரணத்தால் சொல்லொணாத் துயரத்தில் ஆழ்ந்திருக்கும் அவரது மனைவிக்கும், குடும்பத்தாருக்கும் எனது இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், சாலை விபத்தில் காலமான காவல் துறை உதவி ஆய்வாளர் திரு. M.வீரராகவன் அவர்களின் குடும்பத்திற்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து இரண்டு லட்சம் ரூபாய் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

*வெளியீடு, இயக்குநர்,*
*செய்தி, மக்கள் தொடர்புத் துறை,*
*சென்னை-9*

**ஜெ ஜெயலலிதா**
தமிழக முதலமைச்சர்